[6th August 1966

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்டம் இந்த மன்றத்தில் வந்தபோது, அதிலுள்ள குறைகளை மாவட்டங்களில் இருக்கின்ற கலெக்டர்கள் கவனித்து, ரயத்துக்களுக்கும் பட்டா கொடுப்பார்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் உறுதி கூறினார்கள். ஆனால் இப்போது போடப்பட்டிருக்கும் உத்தரவின்படி லான்ட் ஓனர்களுக்கு மட்டும்தான் பட்டா கொடுக்க முடியும், ரயத்துக்களுக்குப் பட்டா கொடுப்பதற்கில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, ரயத்துக்களுக்கும் பட்டா கொடுக்கின்ற அளவில் இந்த உத்தரவை மாற்றுவதற்குச் சர்க்கார் முன்வருமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்த உத்தரவின் விவரங்கள் இப்போது என்னிடமில்லை. இதைப்பற்றி கனம் அங்கத்தினர் விரிவாக எழுதி அனுப்பினால் கவனிக்கலாம்.

* 170 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether any representations were received by the Government from the inam ryots of Navalok village, North Arcot district for notifying the village under Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act; and

(*b*) the details of the action taken by the authorities?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) The matter is under consideration of the Government.

கடையநல்லூர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

* 171 கேள்வி.—திரு. அ. பெ. தர்மலிங்கம் :
திரு. ஆ. தங்கவேலு : } கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், கடையநல்லூர் நெசவாளர் கூட்டுறவு மொத்த உற்பத்தி விற்பனைச் சங்கத்தில் நடைபெற்றுவரும் ஊழல்கள்பற்றி அதன் அங்கத்தினர் பலர் கையொப்பமிட்டுப் புகார் ஏதேனும் அண்மையில் அனுப்பியிருக்கிறார்களா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

The Hon. Sri N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (*a*) Yes.

(*b*) An enquiry is in progress.

திரு. ஆ. தங்கவேலு : தலைவர் அவர்களே, கடையநல்லூர் மொத்த விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தில் பல ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன என்று பல முறை புகார்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இப்போது இதன்பேரில் விசாரணை நடைபெற்று வருவதாக

அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். சீக்கிரமாக விசாரணை நடத்தி, உடனடியாக முடிவு எடுப்பதற்கு ஏதாவது வழி செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : இதற்காக ஸ்பெஷல் ஸ்டாஃப் போட்டிருக்கிறார்கள். விசாரணை செய்து கொண்டிருக்கிறார்கள். கூடிய சீக்கிரம் விசாரணை நடத்த வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், 15-8-1966-க்குள் ரிப்ளை தரவேண்டும் என்று அவர்களுக்கு 'ஷோ காஸ்' நோட்டீசும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், இந்த சொஸைட்டியின்மீது என்னென்ன குற்றச்சாட்டுகள் வந்திருக்கின்றன, அதனுடைய நிர்வாகத்தினர் யார் என்று அறியலாமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : அந்தத் தகவல் இங்கு இல்லை. ஆனால் 13 சொஸைட்டிகளுக்கும் 'ஷோ-காஸ்' நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏன் இதிலிருந்து நீக்கக் கூடாது என்று கேட்கப்பட்டிருக்கிறது. மற்ற விவரங்கள் வேண்டுமென்றால் தனியாகத்தான் கேள்வி போடவேண்டும்.

மத்தியக் கூட்டுறவுப் பாங்கியில் குளிர்ப்பதனச் சாதனம்

*172 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா--

(அ) வட ஆற்காடு மாவட்டம், வேலூரில் உள்ள மத்திய கூட்டுறவுப் பாங்கியில் குளு குளு சாதனம் (air conditioning apparatus) அமைத்ததற்கு அரசாங்க அனுமதி பெறப்பட்டுள்ளதா ?

(இ) மற்ற மாவட்டங்களிலுள்ள கூட்டுறவுப் பாங்கிகளிலும் இம்மாதிரிச் சாதனங்கள் அமைக்க அனுமதி பெறக் கோரிக்கைகள் வந்துள்ளனவா ?

கனம் திரு. ந. நல்ல சேனுபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) & (இ) இல்லை. தங்களுடைய கட்டடங்களில் குளிர்ப்பதனச் சாதனங்களை (air-conditioning units) அமைப்பதற்குச் செலவு செய்ய மாவட்டக் கூட்டுறவு மத்திய பாங்குகள் அரசாங்கத்தின் அனுமதி பெறவேண்டிய அவசியமில்லை.

Multimetal ore deposits

*173 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether any deposits of Gypsum have been discovered in the taluks of Pollachi, Palladam and Udumalpet of Coimbatore district; and

(*b*) if so, the estimated extent of the said deposits?